Online Case
DEPOSITION OF THE WITNESS
IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, RAMESWARAM
**Case No:STC.No.5/2024**
**prosecution witness: PW-4**

| | | |
|---|---|---|
| Name | : | Caste |
| Fathers Name | : | calling |
| Village | : | Religion |
| Taluk | : | Age |

**Accused absent. Petition filed and allowed.**
வாக்குமூலம்
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், இராமேஸ்வரம்
வழக்கு எண்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | நந்தகுமார் | ஜாதி | : | |
| க/பெ. | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுகா | : | | வயது | : | |

04.12.2024
முதல் விசாரணை:-

நான் இரோமேஸ்வரம் சுடுகாட்டன்பட்டியில் வசித்து வருகிறேன். சிவில் இஞ்சினியராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 19.09.2022ம் தேதி இரவு 08.30 மணியளவில் நான் தங்கச்சிமடம் தர்ஹா பஸ் ஸ்டாப் அருகே நின்று கொண்டிருந்தபோது தங்கச்சிமடம் காவல்நிலையத்தில் இருந்து போலீசார் வந்து சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்தார். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் முதல் கையொப்பம் என்னுடையது இல்லை. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.
**(அரசுத் தரப்பு வேண்டுகோளுக்கிணங்க சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவிக்ககோரி அனுமதி அளிக்கப்பட்டது.)**
அரசு தரப்பு குறுக்கு விசாரணை:
போலீசார் விசாரணையில் கடந்த 19.09.2022ம் தேதி இரவு 09.30 மணியளவில் நானும், ரொனால்ட் என்பவரும் தங்கச்சிமடம் தண்ணீர் ஊற்று வளைவு ரோட்டின் அருகே நின்று கொண்டிருந்தோம் என்றால் சரியல்ல. அங்கு வந்த தங்கச்சிமடம் காவல்நிலைய சார்பு ஆய்வாளர் எங்கள் முன்னிலையில சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்தார் என்றால் சரியல்ல. அந்த பார்வை மகஜரில் நானும், ரொனால்ட் என்பவரும் கையொப்பம் செய்ததாக போலீசார் விசாரணையில் தெரிவித்துவிட்டு தற்போது உண்மையை மறைத்து எதிரிகளுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

S ILAIYARAJA
Digitally signed by S ILAIYARAJA
Date: 2024.12.04 18:34:08 +0530